ஸ்ரீ நாராயண குரு

புதுமரபைத் தந்தருளிய மகான்



ஸ்வாமி தர்மதீர்த்தர்

ஸ்ரீ நாராயண குரு புதுமரபைத் தந்தருளிய மகான்

சுவாமி தர்மதீர்த்தர்

தமிழாக்கம்

மேலூர் தாமோதரன்

வெளியிடுபவர்
குருதேவ தர்மம்
ஸ்ரீநாராயணகுரு மந்திரம்
இராஜேஸ்வரி காலனி, விருகம்பாக்கம்
சென்னை - 600 092.
போன் : 472 6107, 372 1262

ஸ்ரீநாராயண குரு
புதுமரபைத் தந்தருளிய மகான்

சுவாமி தர்மதீர்த்தர்

தமிழாக்கம்
மேலூர் தாமோதரன்

First Edition ' 2000

Design Layout, Typeset & Printing :
Sree Narayana Guru Mandiram Press
99, Arcot Road, Chennai - 600 092.

Publishers :
GURUDEVADHARMAM
Rajeswari Colony,
Virugambakkam,Chennai - 600 092.
Phone : 472 6107, 372 1262.

Price : Rs. 5.00/-

முன்னுரை

பாரத நாட்டின் தொன்மை வாய்ந்த ஆன்மீக சிந்தனைகளிலும் பண்பாட்டு கோட்பாடுகளிலும் ஸ்ரீ நாராயண குருவின் வாழ்க்கையும் அவர் தந்தருளிய போதனைகளும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஓர் இடத்தைப் பெற்றுள்ளன. இமயமலையே என்பது போல் மாமனிதர்களையும் தொலைவிலிருந்தே பார்க்கலாம் என்று புத்தபிரான் தர்ம பதத்தில் கூறியுள்ளார்.

சமூக சீர்திருத்தவாதி, கவிஞன், இலக்கியப் படைப்பாளி, ஆன்மீக குரு இப்படி பல கோணங்களில் அவருடைய தனிப் பெருமையைக் கண்டுணரலாம். ஆனால் நமது வாக்குக்கும், சிந்தைக்கும், எழுத்துக்கும் அப்பாற்பட்டதுதான் குருவின் நிலை.

சுவாமி தர்மதீர்த்தர் இயற்றிய "புது மரபைத் தந்தருளிய மகான்" எனும் இந்த சிறு புத்தகத்தின் வாயிலாக குருவினுடைய வாழ்க்கையின் சாரமும் அவர் தந்தருளிய மரபின் பெருமையும் கச்சிதமாக விளக்கப்பட்டுள்ளன.

பக்தியும் ஞானமும் ஒரு மனிதனில் பரஸ்பரம் இணைந்து பூரிப்பும் பொலிவும் பெற்று விளங்கும் காட்சி நமக்கு வியப்பைத் தரக்கூடியது.

அவர்கள் வருகிறார்கள். அவர்களை அவர்களுடைய வாழ்க்கை நாட்களிலே புரிந்து கொள்ளப்படுவது அபூர்வம்.

அவர்கள் விட்டுச் சென்ற பணிகள் நெடுங்காலம் நீடித்து கொண்டேயிருக்கும். மக்கள் பின்னர்தான் அப்பணிகளின் பெருமையை வியப்புடன் உணர்வார்கள். அவர்கள்தான் அவதாரங்களாகவும் சமயங்களை நிறுவியவர்களாகவும் எண்ணப்படுகிறார்கள். அவ்வகையைச் சார்ந்த ஓர் மாமனிதர் ஸ்ரீ நாராயண குரு.

அவருடைய தனிப் பெருமை :

நாம் மற்றவர்களை மதிப்பிடும் போது அவர்கள் ஆக்கி வைத்துள்ள பயனுள்ள நிறுவனங்களையும் சகமனிதர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் பொருட்டு அவர்கள் ஆற்றிய நற்பணிகளையும் மனதில் கொள்கிறோம்.

அவர்கள் செய்த காரியங்களைவிட, அவர்கள் தந்துள்ள போதனைகளையும், அவர்களுடைய அரிய கருத்துக்களையும் எண்ணங்களையும் வைத்து வருங்காலத் தலைமுறைகளுக்கு அவர்கள் எவ்வாறு தொண்டாற்றத் தகுதி வாய்ந்தவர்கள் என்பதை கணக்கில் கொண்டு அவர்களை நம்மால் மதிப்பிட முடியும்.

மேலும் அவர்கள் தனிப்பட்ட முறையில் வாழ்ந்த விதம், அவர்களுடைய பெருந்தன்மை, தூய்மை, தியாக மனப்பான்மை, ஆன்மீக வளர்ச்சி போன்றவற்றை வைத்தும் அவர்களை புரிந்து கொள்ளலாம். ஆனால் இவை யாவும் ஒருமித்து விளங்குகின்ற மாமனிதர்களை காண்பது மிகவும் அரிது.

ஏழ்மையில் பிறந்து கோடீசுவரர்களாக மாறி பெரிய நிறுவனங்களை நிறுவி அதன் வாயிலாக மற்றவர்களுக்கு தொண்டாற்றி வாழ்ந்தவர்களின் உதாரணங்கள் இருக்கலாம். ஆனால் அவர்கள் ஆன்மீக வளர்ச்சியைப் பெற்றவர்களாகவோ, பெரிய பண்பாட்டு இயக்கங்களை துவக்கி வைத்தவர்களோ இருக்க மாட்டார்கள்.

பெரும்பாலான மக்களின் வாழ்க்கையில் புரட்சிகரமான நோக்கங்களை புகுத்தியவர்களும் மனித இனத்தின் மனதைத் தொடுகின்றவாறு அறைகூவல் விடுத்தவர்களும் இருக்கக்கூடும். ஆனால் ஆக்கப்பணிகளிலும் எண்ணங்களை ஒருங்கிணைத்து நடத்திச் செல்லுவதிலும் ஒருமித்து வெற்றி பெற்றவர்கள் மிகக் குறைவு.

ஒரு யோகி ஆகுதல், ஆன்மீக வலிமை பெறுதல், தன்னிடம் வருபவர்களை தன்வயப்படுத்தும் திறமை, எளிமை, தூய்மை, தியாக மனப்பான்மை இவையாவும் தன்னடக்கி, விரிவான ஆக்க பணிகளுக்கு தலைமை தாங்குதல், உலகம் முழுவதும் தழுவக் கூடிய வகையில் பண்பாட்டு இயக்கம் ஒன்றை துவக்கி வைத்தல், அத்தனை

காரியங்களும் ஒருவரால் முடியுமெனில் அந்த ஒருவர் நிச்சயமாக தெய்வீக வலிமையை பெற்றவராகத்தான் இருக்க வேண்டும்.

இவ்விஷயத்தில் ஸ்ரீ நாராயண குருவுடன் ஒப்பிடக்கூடிய வேறு ஒருவரை சமீப கால வரலாற்றில் நம்மால் காண இயலாது.

ஏழையாகப் பிறந்து, ஏழையாக வளர்ந்த அவர் சொத்துசுகங்கள் எதுவும் வைத்ததில்லை. ஆனால், சமயம், சமூக சேவை, கல்வி, தொழில், கலாசாரம் ஆகிய பணிகளில் ஈடுபாடு கொண்டு ஏராளமான மாபெரும் ஸ்தாபனங்களை அவர் துவக்கி வைத்தார். இந்த பெரும் பேறு வியக்க வைக்கக்கூடியது. பல லட்சக் கணக்கான மக்கள் இந்த எளிய மனிதனின் முயற்சியினால் பயனடைந்தவர்களாவார்கள்.

சமூகத்தின் பழமையான மத தத்துவங்களின் அடித்தளத்தை உலுக்கி வைத்தவாறு அமைந்தது குருதேவரின் வாழ்க்கைக் கொள்கை.

ஒரு புதிய பண்பாட்டு புத்துணர்சியை உண்டு பண்ணுகின்ற அளவுக்கு புரட்சிகரமான ஒன்று அவர் துவக்கி வைத்த இயக்கம். அதன் விளைவாக திருவாங்கூர் மகாராஜா கோயில்களில் அனைவருக்கும் அனுமதி அளிக்கும் அறிக்கையைப் பிறப்பித்தார். அது ஒரு புது யுகப் பிறவியின் அறிகுறியாக விளங்கியது.

ஒரு தனிமனிதன் என்கிற முறையில் குருதேவர் மனிதர்களுக்கிடையே தெய்வத்தைப் போல் மிகுந்த

மரியாதையை, அன்பை, ஆராதனையைப் பெற்று வாழ்ந்தவர். அந்த தனிப் பெருமையை வார்த்தைகளால் விவரிக்க இயலாது.

அவருடைய ஆழ்ந்த ஞானமும், எளிமை, தூய்மை, செல்வாக்கு, அவர் மற்றவர்களுக்கு மனமெய்மை சார்ந்த ஒருவராக இருந்தவிதம், இவையாவும் அவர் மற்றவர்களை விட மாறுபட்ட ஒருவர் என்பதை நிரூபித்து காண்பித்தன.

1928ம் ஆண்டு அவர் சமாதிநிலை எய்தபோது கேரளாவிலிருந்து வெளிவரும் தியோசபிக்கல் ஜர்னல் எனும் பத்திரிகை இரங்கல் செய்தியில் கூறியதாவது,

கடந்த பல நூற்றாண்டுகளில் இந்தியாவில் அவர் பெற்றது போன்ற பக்தி நிறைந்த வெகுமதி வேறு யாரும் பெற்றதில்லை. அந்த வெகுமதி மகிமை வாய்ந்தது. சோர்வடையாமல், அனைத்தையும் தழுவியவாறு, மாசற்ற ஒன்றானது. சமூகச் சூழல்களால் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உய்யும் வழியை காட்டுவதற்கு சில காலங்களில் முக்திநிலை பெற்ற, துணிவாற்றல் படைத்த ஆத்மாக்கள் தோன்றுவார்கள் என்கிற உண்மைக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கியவர்.

சூரியனைப் போல் தனது முன்னிலையாலே அவர் வெளிச்சமும் அன்பும் பரப்பினார். அந்த வெளிச்சத்தின் உக்கம் ஏற்று பலபேர்கள் நாவன்மை பெற்று பிரபலமானார்கள். அவருடைய அன்பார்ந்த முன்னிலை கடும் பகைகளின் வேர்களை அறுத்தது.

ஐயமுற்று அவதிப்படும் இதயங்களுக்கு அவருடைய ஞானப்பார்வை அமைதியைத் தந்தது.

அவருடைய துறவறம் கர்மயோகம் எனும் சுயநலமற்ற சேவையின் உட்பொருளை விளக்கிக் காட்டியது. பதஞ்சலியின் யோக சித்தி, சங்கரசாரியரின் ஞானமிகுதி, மனுவின் அரசாளும் திறன், புத்தரின் துறவறம், முகம்மது நபியின் ஆன்மீக பலம், கிருஸ்துவின் எளிமை இவையாவும் ஒருங்கிணைந்த அந்த நாராயண ரிஷி 72 ஆண்டுகள் மனித வாழ்க்கை எனும் நாடகத்தை முடித்து, வந்த இடத்துக்கே திரும்பி சென்று விட்டார்.

தெய்வீக ஞானம் என்னவென்று தெரிந்தவர்களுக்கு மட்டும் கிடைக்கக்கூடிய நல்லோர்களின் ஆதரவும், புகழும் முழுமையாகப் பெற்ற அந்த மாசற்ற வாழ்க்கை அமரத்துவம் எய்தியது. வருங்காலத் தலை முறைகளுக்கு அவர் இந்தியாவில் தோன்றியுள்ள அவதாரங்களில் ஒன்றெனத் தோன்றுவார்.

மேற்கூறிய வார்த்தைகள் ஸ்ரீ நாராயணகுரு தாழ்த்தப்பட்டவர்கள் முன்னேறும் வழியை காட்டியவராகவும், இனப்பான்மை கொண்ட வேறுப்பட்ட சமூகங்களுக்கு அமைதியைத் தந்த அவதாரமாகவும், உலக குருவாகவும் இருந்தவர் என்பதை நிரூபித்து காட்டுகின்றன.

வரலாற்றில் அவருக்கு ஓர் இடம் :

மேற்கு மலைக்கும் அரபிக்கடலுக்கும் இடையிலான அந்த சின்ன நிலப்பகுதி ஒரு மாமேதையின் பிறப்பிடமும், ஒரு புதிய பண்பாட்டின் ஊற்றிடமும் ஆகிவிட்டது என்று சொன்னால் பலபேர்கள் அதை நம்ப மறுப்பார்கள்.

கடந்த பல நூற்றாண்டுகளாக கேரளாவின் சமய வரலாற்றைப் பார்த்தால் அங்கு தற்போது புத்துயிர் பெற்று வளரும் இந்த இயக்கம் இந்தியாவில் மட்டுமின்றி உலக நாடுகளிலே ஒரு புதிய பண்பாட்டுணர்ச்சியை தூண்டிவிடக் கூடிய ஒன்றாகும் என்பதைத் தெரிந்த கொள்ளலாம்.

பண்டைய காலத்தில் இந்து கலாசாரத்தின் வளர்ச்சியில் ஆதி சங்கரரின் வாயிலாக கேரளம் என்னன்ன கொடுத்துதவியுள்ளதோ அதுவேதான் தற்போதும் அந்த கலாசாரத்தின் உயிரும், ஊக்கமுமாக நிலைக் கொள்கிறது. கிருஸ்துவம், இஸ்லாம், புத்த மதம், ஜைத மதம் போன்ற மற்ற மதங்களும் அதே இடத்தில்தான் ஏதோ மறை மெய்மையான மாறுதல்களை அடைந்து கொண்டிருக்கிறது.

இந்து மதத்தவர்கள் சைவர்கள், வைணவர்கள் என்று வேறுபட்டு முரண்பட்டு கொண்டு இருந்தபோது, ஞானயோகம், கர்மயோகம், பக்தியோகம் என்று பற்பல வழிமுறைகள் வந்து மக்களுக்கு குழப்பம் ஏற்படுத்தியபோது, ஆரியர்களின் வருகைக்கு முன்

நிலவி யிருந்த தென்னாட்டு கோவில்கள் புது மாற்றங்களை கையாளத் தொடங்கிய போது, சமூகத்திலும், மத நெறிகளிலும் குழப்பங்கள் ஏற்பட்ட போது, கேரளாவில் ஒரு தனிப் பெரும் ஜோதி பிறவியெடுத்து பாரத தர்மத்தை நாடு முழுவதும் நிலை நாட்டியது.

அந்த ஆதி சங்கராசாரியார் பிறந்தது திருவாங்கூரில் ஓர் சின்ன கிராமத்தில். அவர் தர்மத்தை பேணிகாத்து, அத்வைதம் எனும் ஏகத்துவ தத்துவத்தை தந்து சமய வேறுபாடுகளுக்கு ஓர் முற்றுப் புள்ளியை வைத்தார். மேலும் அவர் புத்த மத தத்துவங்களையும் இந்து மதத்துடன் ஒருங்கிணைத்து ஒரு பொது பின்னணியை அமைத்து தந்தார்.

இந்து மதத்தின் ஒப்பற்ற குருவாக விளங்குபவர் ஆதி சங்கரன். அவர் அன்று கேரளாவில் ஏற்றி வைத்துள்ள அத்வைத தீபம் அணையா வெளிச்சமாக நிலவுகிறது.

இந்து மதக் கொள்கைகளை ஒருங்கிணைத்தல் அனைத்து உயிர்களும் ஒன்றென்று ஆன்மீக போதனையை தருதல் ஆகிய இரண்டு மாபெரும் காரியங்களை செய்து முடித்த சங்கரன் தனது இளம் வயதிலே காலம் எய்தினார். ஆனால் அவர் விட்டு சென்ற புது கலாசாரத்தின் விதைகள் காலப்போக்கில் முளைத்து இலைவிட்டு வளரப் போகின்ற ஒன்றாக இருந்தன.

நாடுகள் மற்றும் சமயங்கள் ஆகியவற்றின் விதியை நிர்ணயிக்கின்ற நியதி இந்த யுகத்தில் மனிதர்களை ஒன்று சேர்க்கும் பொருட்டு மீண்டும் ஒரு முற்போக்கு முயற்சி தேவை என்று உணர்ந்திருக்கலாம்.

முன்னம் ஒருமுறை காசியில் வைத்து ஆதிசங்கரன் ஒரு சண்டாளனை சந்தித்த போது, அந்த சந்திப்பு பிற்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய செயல்களைப் பற்றி சூசகமாக கூறியிருக்கலாம். சண்டாளனை பார்த்ததும் சங்கரன் அவனை கிட்டவராமல் தடுத்தான்.

அப்போது அந்த ஞானிக்கு உயிரினத்தின் ஆன்மீக ஒருமைப்பாட்டை தெளிவாக்கி சாதியுணர்வின் மூடச் செயலை விளக்கினான். அதை கேட்டுணர்ந்த சங்கரன் அந்த சண்டாளனின் கால்களில் விழுந்து அவனை குருவென ஏற்றுக் கொண்டான். வருங்காலத்தில் இங்கு வரவிருக்கின்ற குருவின் வாழ்க்கைக் குறிக்கோள் சாதி எனும் கொடுமையை ஒழித்து கட்டுவதாக இருக்க வேண்டும் என்பதன் முன்னெச்சரிக்கைதான் மேற்கூறிய சம்பவம்.

அந்த குரு வந்தார், போனார். அவர் ஆதி சங்கரரின் செய்தியை முறைக்கு கொண்டு வந்து தற்கால வாழ்க்கையுடன் இணைத்து காண்பித்தார். பழைய மெய்விளக்கக் கொள்கையின் புது முகப்புதான் ஸ்ரீநாராயண குருவின் போதனைகள். அது இந்து மதத்தை மட்டுமின்றி உலகெங்கிலுமுள்ள மற்ற மதத் தத்துவங்களையும் ஒருங்கிணைத்து வாழ்க்கையின்

அடிப்படையாக்கி, ஒருமைப்பாட்டை நிரூபித்து காட்டியது. சங்கரன் இந்து மதத்தவர்களின் வேறுபட்ட பிரிவுகளின் பொது பின்னணியை காண்பித்த போது ஸ்ரீ நாராயணகுரு அனைத்து உலக மதங்களுக்கும் ஒரே பின்னணியென்று தெளிவுப்படுத்தினார்.

மனித குலத்தின் ஒருமைப்பாட்டைப் பற்றி ஸ்ரீசங்கரன் உலகுக்கு ஓதித்தந்தார். ஆனால் அந்த கருத்துக்களை செயல் முறைக்கு கொண்டு வந்தவர் ஸ்ரீநாராயணகுரு.

நாராயண குருவின் மதம் எளிமையானது. தர்க்கங்களைத் தவிர்த்தது, செயல் முறைக்கு கொண்டு வரக்கூடியது. மற்றவர்களின் வாழ்க்கையை புனிதப்படுத்துவதற்கு தேவையான செல்வாக்கும், வலிமையும் அவருக்கு இருந்தன.

ஏழை, எளிய மக்களை அன்புடன் நேசித்த அவரை மக்கள் புத்தபிரானைப் போல் வாழ்த்தி வணங்கினர். அவருடைய தியாக மனப்பான்மையைக் கண்ட சிலர் அவரை யேசுவுடன் ஒப்பிட்டார்கள். பல்லாண்டுகாலம் அவர் இஸ்லாமிய மக்களிடையே வாழ்ந்தவர். அவருடைய சகோதர மனப்பான்மையில் இஸ்லாமீய மக்கள் நபி நாயகத்தைக் கண்டார்கள்.

கேரளாவில் நிகழ்ந்த பல மதங்களின் சங்கமத்திற்கு பின் ஏதோ மறைமெய்மை வாய்ந்த சக்தியின் ஈடுபாடு இருக்கக்கூடும் என்று கருதலாம்.

யேசுவின் முதல் சீடர்களில் ஒருவர் கேரளாவுக்கு வந்தவராவார். மிகப்பல கிறிஸ்தவர்கள் பண்டைய காலம் முதல் அங்கே வாழ்ந்து வருகிறார்கள்.

முகலாயர்கள் வடஇந்தியாவுக்கு வருவதற்கு முன்னமே அரேபிய நாட்டிலிருந்து இஸ்லாமியர்கள் வியாபாரத்திற்கென கேரளாவிற்கு வந்தனர். அங்கு மிகப்பல முஸ்லீம் சமுதாயத்தினர்கள், இந்துக்கள், கிறிஸ்துவர்கள் ஆகியவர்களுடன் இணைந்து வாழ்கிறார்கள். அங்கு ஜூதர்களின் குடியிருப்பு ஒன்றும் இருக்கிறது.

மேல்மட்ட சாதிகளுக்கு புறம்பாக இருந்த மக்களின் எண்ணிக்கை அங்கு மிகுதியாக இருந்ததனால் பல மதங்களை சார்ந்த மக்கள் பரஸ்பரம் ஊடாடுவதற்கு போதிய வாய்ப்புகள் மற்ற இடங்களை மிஞ்சிய அளவிற்கு கேரளாவில் இருந்தன.

ஸ்ரீ நாராயண குருவின் சீடர்களாக வந்தவர்களில் இந்துக்கள் மட்டுமின்றி, புத்த மதத்தவர்கள், பிரம்ம சமாஜர்கள், ஆரிய சமாஜர்கள், பகுத்தறிவுவாதிகள் இப்படி பலதரப்பினர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் எல்லோரும் தங்களது குருவின் அருகாமையில் ஒருமையுடன் இணைந்தனர்.

கேரளாவில் தற்போது நிகழ்ந்து வருகின்ற ஒருமைப்பாடு இயக்கத்திற்கு அறைக்கூவல் விடுத்து விளங்கியவர் ஸ்ரீ நாராயண குருவே ஆவார்.

அவருடைய தத்துவக் கொள்கை:

ஒரு சாதி, ஒரு மதம், ஒரு தெய்வம் எனும் வார்த்தைகளில் குருதேவரின் தத்துவக் கொள்கை உள்ளடங்கியுள்ளது. மனித இனத்தின் அடிப்படை ஒற்றுமையே அனைத்து மதங்களின் சாரமும், நோக்கமும் உட்கொண்டது அவருடைய கொள்கை. எச். ஜி. வெல்ஸ் எனும் மேற்கத்திய மேதையின் முதல் மற்றும் முடிவு எனும் புத்தகத்தில் இதே தத்துவத்தை நாம் காண்கிறோம். அந்த புத்தகத்தில் கூறியதாவது.

நாம் அதாவது நீயும் நானும் ஒரே மனவெழுச்சியின் இருபகுதிகளே. அது மட்டுமல்ல ஒரே உயிரோட்டத்தைச் சார்ந்தவர்கள்.

நாம் ஒவ்வொருத்தருக்கும் தாய், தந்தைகள் என்று இரண்டு பேர்கள், பாட்டனார்கள் என்று எட்டு பேர்கள், அப்படி பின்னோக்கிப் போகும் போது ஐம்பது தலைமுறைகளை கணக்கிடுவதற்குள் உலகத்திலுள்ள அனைவரும் நமது மூதாதையர்களாக காண முடியும்.

நமது ரத்தங்கள் ஒன்றென கலந்து கொள்கிறது. நாம் தனிப்பட்டவர்களாக இருக்க முடியாது. ஐம்பது தலைமுறைகளை கணக்கிடுவதற்குள் உலகத்தில் உள்ள அத்தனை பேர்களும் நமது ரத்த உறவினர்களாகக் காணப்படுகின்றன. நானும் எனது எதிரியும் எந்த குழந்தை எமது, எந்த குழந்தை அவனுடையது என்று அடையாளம் கண்டு கொள்ள இயலாத வண்ணம் ஆகிவிடுகிறது.

நமது தனி மனிதத் தன்மைகள், நாடுகள், ராஜியங்கள், இனங்கள் யாவும் ஒரே ரத்த ஊற்றின் குமிழிகளாகவும் நுரைக் கொத்துகளாகவும் இருக்கின்றன.

ஒரே குலம் என்று குருதேவர் சொன்னதின் பொருள் இதுவேயாகும். மனிதனை வேறுபடுத்திக் கொண்டு சமமான வாய்ப்புகளை அவனுக்கு அளிக்காமல் இயங்கிவரும் நிறுவனங்களையும் கொள்கைகளையும் ஒரே குலம் எனும் இந்த சொற்கள் நிராகரித்து விடுகிறது.

வாழ்க்கையின் ஒற்றுமையை வற்புறுத்திய பின் குருதேவர் அந்த வாழ்க்கையை ஆளுகின்ற மத நெறிகளின் தன்மையைத் தெளிவுப் படுத்துகிறார். இங்கு ஆன்மீகம் மட்டுமல்லாமல் சகோதரத்துவம், நல்லொழுக்கம், சுகாதாரம், சமூக உறவுகள், பொருளாதாரம், மனமகிழ்ச்சி ஆகியயாவும் அவ்வாறு ஒருமைபடுத்திக் காணலாம்.

மதங்களின் ஒற்றுமையை நடைமுறைக்கு கொண்டு வருவதைப் பற்றி கூறும் போது ஒருமுறை குருதேவர் சொன்னதாவது :

இந்தியாவில் வைதிக, மீமாம்சா, துவைதம், அத்வைதம் என்று மாறுபட்ட கோட்பாடுகள் இருக்கின்றன. இவையாவும் இந்து மதம் என்று அழைக்கப்படுகிறது. மாறுபட்ட கோட்பாடுகள் ஒரே மதத்தின் கீழ் கொண்டு வர இயலுமெனில் அத்தனை

மதங்களையும் ஒரே மதமெனக் கருதுவதை ஏன் ஒத்துக் கொள்ள முடியாது? எல்லா மத குருமார்களும் காலத்திற்கும் சூழலுக்கும் ஏற்றவாறு சற்று வித்தியாசமாக கூறியிருந்த போதிலும் மனிதன் உய்யும் வகையில் ஒரே நோக்கம் கொண்டவர்களாகத் தான் இருந்து வந்திருக்கிறார்கள்.

தங்களது மத ஒற்றுமையைப் பற்றிக் கூறுபவர்கள் அம்மதத்திற்குள் இருக்கின்ற வேறுபட்ட இயக்கங்களை ஏகத்துவத்தில் பன்மை என்று மேன்மை படுத்திப் பேசுகிறார்கள். ஆனால் மனித குலத்தை மொத்தமாக ஒரே பார்வைக்குள் கொண்டு வந்து பன்மையில் ஒன்மையையும் ஒன்மையில் பன்மையின் அழகையும் ஒன்றுபட காண அவர்களால் இயலவில்லை என்பது வியப்பாக இருக்கிறது.

அவர் ஆற்றிய பணிகள்:

இதெல்லாம் பயனற்ற வெறும் தத்துவப் பேச்சு என்று நீங்கள் எண்ணக் கூடும். சாதி, இனம் போன்றவை மாற்ற முடியாத அளவிற்கு புரையோடிப் போனவை என்றிருப்பின் சகோதரத்துவம், மத ஒற்றுமை ஆகியவை வீண்பேச்சு என்று தான் கருதத் தோன்றும்.

ஆனால் ஸ்ரீ நாராயண குருதேவர் ஆற்றிய பணியை வைத்து பார்க்கும் போது உயரிய கருத்துக்கள் கூட, செயல் முறைக்கு கொண்டு வந்து சமூகச் சீர்த்திருத்தத்திற்கு பயன்படுத்த முடியும் என்பது திட்டவட்டமாகத் தெளிவுபடுகிறது.

சாதிகள் மற்றும் சமூக வேறுபாடுகள் மிகுந்த இடம் கேரளம். என்பது ஆண்டுகளுக்கு முன் குருதேவர் பிறந்த காலகட்டத்தில் பெரும்பாலான மக்கள் அடிமைகளைப் போல் வாழ்ந்து வந்தனர்.

பல லட்சக் கணக்கான மக்கள் ஏழ்மையில், சுகாதாரச் சீர்கேடுகளுடன் அறியாமையில், நோய் நொடியில் வாழ்ந்தனர். கால் நடைகளைப் போல் பேச முடியாமல் மேலாளர்களின் சுகத்திற்கென பணி செய்து வாழ்ந்தனர்.

ஆடு, மாடுகளைப் போல் அவர்கள் விற்பனைப் பொருளாக இருந்தனர். குருதேவர் ஆற்றிய பணியின் பலனாக அம்மக்களில் ஏறக்குறைய இருபத்தி ஐந்து லட்சம் பேர்கள் விடுதலை பெற்று முன்னேறி மிகுதி அடைந்தவர்களாகி விட்டனர்.

பிராமணர்கள் அல்லாதவர்களில் இந்த வகுப்பினர்கள் மட்டும் சுயநினைவு பெற்று சுதந்திரம் பெற்று, தங்களுக்கென தனிக் கோவில்களை நிறுவி, தனி பூசாரிகளை வைத்து தனி மடங்களையும், மத குருக்களையும் வைத்து வாழ்க்கையில் பூரிப்பை அடைந்துள்ளார்கள்.

ஒரு சாதி, ஒரு மதம், ஒரு தெய்வம் எனும் கருத்தை கோவில்கள், பள்ளிகள், மடங்கள், ஆகிய நிறுவனங்களின் வாயிலாக செயல் முறைக்கு கொண்டு வரலாம் என்பதை குருதேவர் நமக்கு நிரூபித்து காட்டினார்.

அவர் வாழ்க்கை பிரச்சனைகளுக்கு ஒரு புதிய வியாக்கியானத்தைத் தந்து அமைதியும், சகோதரத் தன்மையும் மிகுந்த ஒரு புது உலகத்தை உருவாக்கலாம் என்று சுட்டிக் காட்டினார்.

இந்து மதத்தை மாற்றியமைத்தவர் :

இந்து மதத்தில் நிலைத்து வந்த சாதி அடிப்படையிலான சமூக விவஸ்தை, மத நிறுவனங்களான கோவில்கள், மத தத்துவங்களை அடிப்படையாகக் கொண்ட துறவி மடங்கள் ஆகிய மூன்று அமைப்புகளிலும் புரட்சிகரமான மாற்றங்களை கொண்டு வந்தவர் குருதேவர். மாறிக் கொண்டிருக்கும் காலத்திற்கேற்ப மேற்கூறிய மூன்று மட்டங்களிலும் எவ்வாறு மாற்றங்கள் நிகழ்த்தலாமென்று அவர் வழிவகுத்து தந்தார்.

உண்மையில் சாதி என்று ஒன்றில்லை என்று அவர் அவ்வப்போது கூறி வந்தார். ஒருவன் அவன் சாதியை சொல்லாமல் அவனுடைய சாதி என்னவென்று அறிந்து கொள்வது அரிது. நமக்கு சாதி இருக்கிறது என்று நாம் கருதும் போது மட்டும் தான் அது தன்மை பெறுகிறது. இந்த பழக்கத்தை நாம் விட்டு விடுமேயானால் சாதி தானாகவே இறந்துவிடும்.

சாதியை, கேட்காதே, சொல்லாதே, நினைக்காதே என்பது அவருடைய தூரை. அந்த போதனை நாட்டுக்கு சட்டமாக வரவேண்டும். நாடாளுபவன் யாரும் சாதியைப் பற்றிப் பேசக் கூடாது என்று

கட்டளையிட வேண்டும் நொடிக்குள் இந்து மதம் ஒற்றுமையை எய்திவிடும். கிருஸ்தவர்களும், புத்த மதத்தவர்களும், சீக்கியர்களும், இஸ்லாமீயர்களும் சாதியைப் பற்றிப் பேசுவதில்லை.

இந்து மதத்தை விட்டு மாறி சென்றவர்கள் மட்டும் தான் அவர்களிடையே சாதியைப் பற்றி பேசுகிறார்கள். ஏன் இந்துக்கள் மட்டும் சாதியின் முத்திரையுடன் இருக்க வேண்டும்?

கோவில்களில் விழாக்களைக் குறைத்து பயனுள்ள காரியங்கள் அதிகப் படுத்த வேண்டும். அவ்விடங்கள் சுத்தமாகவும் பக்தியை வளர்க்கக் கூடிய வகைகளிலும் அமைந்திருக்க வேண்டும். ஒவ்வொரு கோவிலும் ஒரு ஆன்மீக மையமாக இருக்க வேண்டும்.

தாழ்ந்தவர்களை உயர்த்துவது, பிரிந்தவர்களை இணைக்குவது, கல்லாமையை அகற்றுவது, நோயாளிகளை பராமரிப்பது, கலை, இலக்கியம் ஆகியவற்றை ஊக்குவித்தல் போன்ற பணிகள் அங்கு நடைபெற வேண்டும்.

மதங்களும் மத நிறுவனங்களும் மனித வாழ்க்கையை சிறப்பிக்கும் பொருட்டு இயங்கட்டும். ஒருவன் நல்லவனாக இருப்பினில் அவனுக்கு எந்த மதமென்று பார்க்கத் தேவையில்லை என்று குருதேவர் அடிக்கடி கூறுவதுண்டு.

சன்யாசி என்பவர் தியாகி. தனது வாழ்க்கையை சுயநலமற்ற சேவைக்கென அர்பணித்தவர் என்று அவர்

ஒரு சீடனிடம் சொன்னார். பழங்காலத்து துறவி முறை இப்போது பயனற்ற ஒன்று.

மடங்களில் உட்கார்ந்தவாறு சோம்பலுடன் மற்றவர்களின் உழைப்பை பயன்படுத்தி உண்டு வாழ்கின்ற அந்த பழைய சம்பிரதாயம் இக்காலத்துக்கு பொருந்தாது.

துறவிகள் ஞானபலம் பெற்றவர்களாக இருக்க வேண்டும். அந்த வலிமையை மற்றவர்களின் நலனுக்காக பயன்படுத்த வேண்டும். மக்களை தர்மத்தின் பாதைக்கு கொண்டு வரும்படி அவர்கள் அறிவுரை நிகழ்த்த வேண்டும். துறவி ஒரு புது வாழ்க்கைக்கு வழி காட்டுபவராக இருக்க வேண்டும்.

சாதி, கோவில், மடங்கள் இவை மூன்றும் தற்போதுள்ள நிலையில் இந்து மதத்தை எதிராக பாதிக்கக் கூடிய வகையில்தான் இயங்கி வருகின்றது. அவை முன்னேற்றத்தைத் தடுத்து, மாற்றங்களைத் தவிர்த்து அடிமைத்தனத்தைப் போற்றி மக்களின் அறிவுக்கு அவமானமாக பயனிழந்து விட்டன.

அவைகள் குருதேவர் கூறியது போல் முன்னேற்றப் பாதைக்கு கொண்டு வந்து இந்து மதத்திற்கும் மக்களுக்கும் நல்வழியைக் காட்டுகின்ற வகையில் மாறிவிட வேண்டும். குருதேவர் இந்து மதத்தைப் பொறுத்தவரை நிகழ்த்தியது இம்மாதிரியொரு மாற்றத்தையாகும்.

ஒரு தெய்விக குரு :

திருவனந்தபுரத்திற்கு அருகாமையில் ஒரு சின்ன கிராமத்தில் பிறந்தவர் அவர். போதிய வசதிகளின்றி ஏழை மக்களிடையே வாழ்ந்த அவர் சுய முயற்சியாலே படித்து, தவம் புரிந்து துறவறம் பெற்று, நேயமும், சேவையும் குறிக்கோளாகக் கொண்டு தன்னைத் தானே உயர்த்தி மற்றவர்களையும் உயரச் செய்தார்.

எந்த நிறுவனத்தின் பின்பலமுமில்லாமல், விளம்பரங்களின்றி அவர் அறுபதுக்கும் மேல் கோவில்களை நிறுவினார். அவையாவும் கல்விக் கூடங்களாகவும் பொருளாதாரம் பெற்று நற்பணிகளில் ஈடுபடுகின்ற வகையிலும் அமைக்கப்பட்டன.

ஸ்ரீ நாராயண தர்ம சங்கம் எனும் பெயரில் அவரால் நிறுவப்பெற்ற துறவி பரம்பரை இந்தியாவிலே மிகவும் வளர்ச்சி அடைந்த ஒன்றாக மாறிவிட்டது.

குறுகிய காலத்திற்குள் அவர் அருள் வாக்குக்களால் பிணியைத் தீர்ப்பவராகவும், பேயை ஒழிப்பவராகவும், மழையை வரவழைப்பவராகவும் மற்றும் அம்மாதிரி அற்புதச் செயல்களை நிகழ்த்துபவராகவும் அறியப்பட்டார்.

நாற்பது ஆண்டு காலம் அவர் தனது தபோபலத்தை மற்றவர்களின் துயரைத் துடைக்கும் வகையில் பயன்படுத்தினார். மக்களின் அளவு மீறிய அன்பும் மதிப்பும் பெற்றார்.

அவருடைய உருவப் படங்களை ஆயிரக் கணக்காண மக்கள் வீட்டில் வைத்து பூசித்தனர். பல உள்ளங்கள் அவரை காப்பாளரெனப் போற்றினர். தன் வாழ்நாளிலே அவரைப் போல் ஆராதனை பெற்றவர் வேறு யாரும் இராது.

ஒரு சிறு கிராமத்து பையன் கடவுளுக்கு ஒப்பாக போற்றி வணங்கப்படலாயிற்று. உலக மாமனிதர்களுடன் ஒப்பிடும்போது அவர் யாருக்கும் பின்னால் அல்ல என்று தெரியவரும்.

அவருடைய பிறவியின் ஏழ்மையிலோ, வாழ்க்கையின் எளிமை, தூய்மை, அறிவின் ஆழம், ஆற்றலின் கூர்மை, பெற்ற பேறுகளின் பெருமை, மக்களால் அளிக்கப்பட்ட அன்பு, மரியாதை, சேவை, தியாகம், அருளின் மகிமை, இப்படி எந்த தன்மையைப் பார்த்தாலும் மனித இதயத்தையும் நம்பிக்கையையும் ஆளுகின்ற மற்ற மகான்களைவிட குருதேவர் திவ்யமான ஓர் இடத்தைப் பெற்றவராவார் என்று காணலாம்.

சுவாமி தர்ம தீர்த்தர்

வரப்போகின்ற காலத்திற்கு வழிகாட்டி ஸ்ரீநாராயண குருதேவர். உலக ஒற்றுமையை தந்தருளும் குருவின் போதனைகள் உலகெங்கிலும் பிரசுரிக்கவுள்ளன என்று ஸ்ரீ நாராயண குருவைப் பற்றியும் அவருடைய தரிசனங்களைப் பற்றியும் தெரிந்துணர்ந்து மதிப்பிட்ட மகான் தர்ம தீர்த்த சுவாமிகள்.

குருவின் தனிப்பெரும் மகிமையை மற்றவர்களுக்கு எடுத்துக் கூறும் வகையில் அவரைப் போல் ஈடுபாடு கொண்டவர் வேறு யாரும் இல்லை. ஸ்ரீ நாராயணகுரு மாகாத்மியம் போன்று நூல்களின் வாயிலாக அவர் இந்த உண்மையை தெரிய வைக்க முனைந்தவர்.

1892 மே மாதம் குருவாயூருக்கு அருகாமையில் சாத்தனாட்டு எனும் இடத்தில் பிறந்த பரமேசுவர மேனன் எனும் பெயர் கொண்ட அவர் சட்டம் படித்து சிறந்த வழக்கறிஞராகப் பணியாற்றினார். அப்போது போதானந்த சுவாமிகள் என்பவர் நிகழ்த்தி வந்த சமூக

சீர்திருத்தப் பணிகளில் தன்னையும் ஈடுபடுத்திக் கொண்டார். ஸ்நேகிதன் எனும் பத்திரிகையின் துணை ஆசிரியராக பணியாற்றினார்.

ஒருமுறை வடக்கஞ்சேரி எனும் இடத்திற்கருகாமையில் பறளிக்காடு என்ற ஊரில் ஸ்ரீநாராயண குருதேவர் வந்த போது குருவை சந்தித்து அவருடைய சீடராக மாறினார். பிறகு இவர் சிவகிரி மடத்திற்கு மேலாளராக நியமிக்கப்பட்டார்.

அங்கு தர்மம் எனும் வாரந்திர பத்திரிகையில் குருதேவரின் பொன்மொழிகளையும் கவிதைகளையும் வெளியிட்டு மக்களிடம் பரப்பும் பணியில் முழ்கினார்.

தர்மத்தை நிலைநாட்டும் பொருட்டு துறவிகளின் ஒரு குழு தேவை என்கிற எண்ணம் ஸ்ரீநாராயண குருதேவரின் மனதில் உதிக்க வைத்தது இவர் ஆற்றி வந்த பணிகளே.

1928 ஜனவரி மாதம் ஸ்ரீ நாராயண தர்ம சங்கம் எனும் ஆன்மீக இயக்கம் குரு ஆரம்பித்த போது அதன் சட்ட திட்டங்களை உருவப்படுத்தியவரும் இவரே ஆவார்.

அப்போது குருதேவரிடமிருந்து இவர் சன்யாஸ திட்சை பெற்று சுவாமி தர்ம தீர்த்தர் எனும் துறவிப் பெயர் பெற்றார். பின் சிவகிரி சமாதி பீடம், குருதேவர் பிறந்த வீடு, அருவிப்புரம் கோயில் ஆகிய இடங்களுக்கு மக்களை ஈர்க்கும் பொருட்டு இவர் பாடுபட்டார்.

குருதேவர் சமாதியை எய்த பின் எஸ்.என்.டி.பி. எனும் இயக்கம் தர்ம சங்கத்தை எதிர்த்து வழக்கு தொடுத்த போது அதற்கு எதிராகப் போராடி வெற்றி பெற்றார். போகப் போக இவருக்கு உறுதுணையாக இருந்து வந்த மற்ற துறவிகளில் சிலர் காலம் எய்திய போது இவர் எதிராளிகளின் துன்புறுத்தலுக்கு ஆளாக்கப்பட்டு அவதிப்பட ஏதுவானார்.

இவர் மேல்மட்ட சாதியை சார்ந்தவர் என்பதால் இவரை மற்றவர்கள் ஏற்றுக் கொள்ள தயங்கினர். அதனால் இவர் வட இந்தியாவுக்கு பயணம் சென்று அங்கு குருதேவரின் கொள்கையை பரப்பும் பணியைத் தொடங்கினார்.

அங்கு இவர் டாக்டர் பாபசாகேப் பி. ஆர். அம்பேத்கரை சந்தித்து குருவின் போதனைகளை அவருக்கு விளக்கினார். வடநாட்டிலிருந்து திரும்பி வந்த போதிலும் உள்ளூரில் சாதியின் பெயரிலுள்ள சச்சரவுகள் தீர்ந்தபாடில்லை.

அந்நிலையில் குருதேவரின் செய்தியை பரப்பும் பணி எளிதன்று என்று தோன்றியது. இவர் கிறிஸ்துவ மதத்தை ஏற்றுக் கொண்டார். மதம் எதுவானாலும் மனிதன் நல்லவனானால் போதும் எனும் குருவின் உபதேசத்தை இவர் கைவிடவில்லை. ஜோண் தர்மதீர்த்தர் என்று பெயர் கொண்டார். இவர் மாதம் தோறும் குருதேவரின் ஜன்ம நட்சத்திரமான சதயம் நாளன்று சிவகிரியில் வந்து வணங்கிப் போவது

வழக்கம். அவர் கிறிஸ்துவ மதத்தை ஏற்ற பின்னும் ஸ்ரீநாராயண குருவே அவருக்கு குருவாயிருந்தவர். அவருடைய அறையில் வைத்திருந்த குருதேவரின் புகைப்படத்தைக் காட்டி அவரே என்குரு என்று சொல்லி வந்தார்.

1976 ஜூலை 18ம் நாள் திருவனந்தபுரத்தில் அவர் சமாதி நிலை எய்தினார்.

ஸ்ரீ நாராயண குருவின் தெய்வ தசகம்

சிவகிரியில் படித்துக் கொண்டிருந்த சிறுகுழந்தைகள் பிரார்த்தனை செய்வதற்காக எழுதப்பட்டதுதான் தெய்வ தசகம். இவை குருதேவரின் பாடல்களிலேயே மிக உயர்ந்த விளக்கங்களை உள்ளடக்கியவையாகும். இந்தப் பாடத் தொகுப்புகளைத்தான் மகாத்மா காந்தி சிவகிரியில் தங்கியிருந்த நாட்களில், சிறு குழந்தைகள் இதைப் பக்தியோடு பாடின பாடலைக் கேட்டு பரவசமான காந்தியடிகள்,

இந்த பாடலை யார் இயற்றினார்கள்? என்று கேட்கவும், "குருதான் இயற்றினார்கள்", என சீடர்கள் தெரிவித்தனர். பாடலின் பொருளையும் புரிந்துக் கொள்ள வேண்டும் என்ற ஆவல் காந்திஜிக்கு அதிகரித்தது. அருகில் இருந்தவர்கள் விளக்கம் அளிக்க அதிசயித்து மனம் நெகிழ்ந்துப் போனார்.

தெய்வம் என்பது எது? அதன் உருவம் என்ன? அதை எப்படிப் புரிந்துக் கொண்டு ஏற்றுக் கொள்வது? என்று கேட்கும் கேள்விகளுக்கு எளிய மலையாள மொழியில் குரு அளித்த விளக்கம் தான் இந்தப் பாடல்.

கேரளத்திலும், வெளி மாநிலங்களிலும் உயர்நிலைப் பள்ளிகளில் குருதேவரது பாடல்கள் கீதமாகப் பாடப்படுகின்றன.

மூலம்

1

தெய்வமே காத்து கொள்கங்ஙு
கைவிடா திங்ஙு ஞங்ஙளே
நாவிகன் நீ பவாப்திக் கோர்
ஆவி வன் தோணி நின் பதம்.

2

ஒந்நொந்நா யெண்ணியெண்ணித் தொட்-
டெண்ணும் பொருள் ஒடுங்ஙியால்
நிந்நிடும் த்ருக்கு போலுள்ளம்
நிந்நிலஸ் பந்த மகாணம்.

3

அந்ந வஸ்த்ராதி முட்டாதெ
தந்நு ரக்ஷிச்சு ஞங்ஙளெ
தன்யராக்குந்ந நீ யொந்நு-
தந்நெ ஞங்ஙள்க்கு தம்புரான்

4

ஆழியும் திரையும் காற்று-
மாழவும் போலெ ஞங்ஙளும்
மாயயும் நின் மஹிமையும்
நீயு மெந்நுள்ளி லாகணம்.

5

நீயல்லோ ஸ்ருஷ்டியும் ஸ்ருஷ்டா-
வாயதும் ஸ்ருஷ்டி ஜாலவும்
நீயல்லோ தெய்வமே ஸ்ருஷ்டிக்
குள்ள ஸாமக்ரீ யாயதும்.

6

நீயல்லோ மாயயும் மாயா-
வியும் மாயா விநோதனும்
நீயல்லோ மாயயெ நீக்கி
ஸாயுஜ்யம் நல்கு மார்யனும்.

7

நீ ஸத்யம் ஞான மானந்தம்
நீ தந்நெ வர்த்தமானவும்
பூதவும் பாவியும் வேறல்
லோதும் மொழியுமோர்க்கில் நீ.

8

அகவும் புறவும் திங்ஙும்
மஹிமா வார்ந்ந நின் பதம்
புகழ்த்துந்நூ ஞங்ஙளங்ஙும்
பகவானே ஜயிக்குக.

9

ஜயிக்குக மஹா தேவா
தீனாவன பராயண
ஜயிக்குக சிதானந்தா
தயாஸிந்தோ ஜயிக்குக.

10

ஆழமேறும் நின் மஹஸ்ஸா
மாழியில் ஞங்ஙளாகவே
ஆழணம் வாழணம் நித்யம்
வாழணம் வாழணம் ஸுகம்.

(ஆதாரம் : குருதேவதர்மம், தமிழாக்க ஆசிரியர் திரு.ஆ.பி. தங்கராஜன்)

1. கடவுளே! பேணிக் காப்பாய்
கைவிடா தெம்மை இங்கே!
படகோட்டி நீ, உன் பாதம்
பவக்கடல் கடக்கும் தோணி!

2. எண்ணிடும் பொருள் ஒவ்வொன்றும்
இறுதியில் ஒடுங்கும் வேளை
மன்னனிலே நிலைக்கும் என்றன்
மனமொன்றே வேண்டும் உன்னுள்.

3. அன்னமோ டாடை நல்கி
அன்புடன் பேணி எம்மை
உன்னத மாக்கும் நீயே
உயிர்தரும் வேந்தன் அன்றோ!

4. ஆழியும் அலையும் காற்றும்
ஆழமும் போல எம்மைச்
சூழ்ந்திடும் மாயை நீக்கிச்
சுடரொளி பொலியச் செய்வாய்!

5. படைப்பவன் நீயே மற்றும்
படைத்திடும் பொருளும் நீயே!
படைத்திடும் தொழிலும் நீயே
படைத்திடும் நெறியும் நீயே!

6. மாயை நீ, மாயாவியும் நீ
மாயாவி நோதன் நீயே
மாயையை நீக்கி மாறா
மலர்ப்பதம் தருவோய் நீயே!

7. உண்மையும் நீயே, ஞான
ஒளியும் நீ, உவகை நீயே!
மண்ணக நிகழ்ச்சி, ஓதும்
மறைமொழி, அனைத்தும் நீயே!

8. அகம்புறம் ஒளிரும் நின்றன்
அருட்சுடர் மகிமை யாலே
புகழ்ந்துனைப் பாடு கின்றோம்
பூரணா போற்றி! போற்றி!!

9. தினரைக் காப்போய் வெல்க!
தேவனே வெல்க, வெல்க!
ஆனந்த வடிவே வெல்க
அருட் பெருங்கடலே வெல்க!

10. ஆழ்ந்தநின் கருணை என்னும்
ஆழியில் நாங்கள் மூழ்கி
ஆழ்ந்திட வேண்டும்! - என்றும்
வாழ்ந்திட வேண்டும் நன்றே!

குருதேவரின் பொன்மொழிகள்

1. ஒரே சாதி, ஒரே மதம், ஒரே கடவுள் - மனிதருக்கு. மதம் எதுவாயினும் மனிதன் முன்னேறினால் போதும். எல்லா மதங்களின் உயிர்சத்தும் ஒன்றே.

2. சாதியைக் கேட்காதே! சாதியை சொல்லாதே! சாதியை நினைக்காதே!

3. ஒருவர் செய்யும் கருமம் மாற்றார் நன்மையின் நோக்கமாக இருத்தல் வேண்டும்.

4. மது - அது விஷம். அதைக் தயாரிக்கவோ, விற்கவோ, அருந்தவோ கூடாது.

5. சங்கம் அமைத்து சக்தி பெறுங்கள். கல்வியால் விழிப்படையுங்கள்.

6. தொழில் செய்து முன்னேறுங்கள். நாம் அனைவரும் ஆதிம சகோதரர்களே.

7. குறித்த காலத்தை கடைப்பிடிக்கப் பழகுங்கள்.

8. நற்செயல்கள் செய்து வருங்காலத்தைப் படையுங்கள்.

9. நீங்கள் தான் ஆத்மாவென நம்புங்கள்.

10. கர்மம் புரிவது உங்கள் புலன்களே, ஆத்மா அதற்கு சாட்சியாக இருந்து பலன் வழங்குகிறது.

11. விவசாயத்தைக் கொண்டு முன்னேற்றம் அடையுங்கள்.

12. உழைப்பைக் கொண்டு முன்னேற்றமடையுங்கள்.

13. "அல்லாஹ்" என்றால் என்ன பொருள் என்று தெரியுமா? இல்லை என்ற அர்த்தம்தான் அதில் அடங்கியுள்ளது. இல்லாதவன் என்று அவனை நினைப்போமாயின் இந்த உலகத்திலிருந்து அகன்று, அன்னியப்பட்டு போய்விடுவோம். உலக அளவுகளையும், வர்ணனைகளையும் வைத்துப் பார்க்கும்போது ஒப்பு இல்லாதவன் என்ற பொருள்தான் இந்தத் தெய்வ சப்தத்தினுள் உள்ளது.

14. சத்யம், ஞானம், ஆனந்தம் - அதுவே கடவுள்.

15. படித்து முன்னேறுங்கள்.

16. முக்கியமான ஆலயங்கள், அறிவை அளிக்கும் கல்விச்சாலைகளாக இருக்க வேண்டும்.

17. சமஸ்கிருதம் படிக்க வேண்டும். நமது பழைய நூல்கள், வேதங்கள் அந்த மொழியில்தான் எழுதப்பட்டுள்ளன. இந்தக் காலக்கட்டத்தில் முக்கிய மொழி ஆங்கிலம். அதைக்

கற்காவிட்டால் வளர்ந்த வரும் உலகத்தோடு நாம் உறவாட முடியாது.

18. விவேகம் என்பது தானாகவே ஒருவனுக்கு அமையுமா? இல்லை! பயிற்சி செய்ய வேண்டும். நல்லப் புத்தகங்களைப் படிக்க வேண்டும்.

19. தர்மம் என்பதுதான் முழுமையான தெய்வம். முழுமையான தனம், தர்மம் எங்கு சென்றாலும் வெற்றியடையும். உயர்வுக்கும் வழிகோலும்.

20. ஒருவன் நல்லவனா? தியவனா? என்பதை அவனது செய்கைகளிலிருந்துக் கவனித்துப் புரிந்து கொள்ள வேண்டும்.

21. மகிழ்ச்சியடைவது என்பது அவரவர்களுடையச் செய்கையின் தீவிரத்தினால் மட்டுமே இயலும்.

22. செய்வது எதுவாக இருந்தாலும் அதை அழகுறச் செய்ய வேண்டும். எதையும் செய்வதற்குச் சோம்பல் கூடாது. இடுகாட்டை ஹரிசந்திர மகாராஜா காவல்காத்து வரவில்லையா?

23. திருமணத்தில் வரதட்சணை வாங்குவதும், கொடுப்பதும் மணமக்களை விற்பதற்கும், வாங்குவதற்கும் ஒப்பாகும்.

24. தான் செய்யும் ஒவ்வொரு செயலும் அடுத்தவனுக்கும் நன்மை தரக்கூடியதாக இருக்க வேண்டும்.

25. துறவி என்பவர் பரோபகாரம், தியாகம், சுயநலமின்மை, பொதுமக்களுக்குச் சேவை செய்தல் ஆகியவற்றைச் செய்பவர்.

26. வேதாந்தம் என்பது அதிகமாகப் படிக்க வேண்டிய ஒன்றல்ல. அலை என்பது எப்படிப் கடலிலிருந்து அன்னியமாகப் பிரிந்து நிற்கவில்லையோ அதுபோல் இந்த உலகம் என்பது யாதார்த்த வாழ்க்கைச் சக்தியில் இருந்து பிரிந்து நிற்கவில்லை! இதைப் புரிந்து கொண்டால் போதும். நாள்தோறும் பயிற்சி செய்தால், இதை மனதில் நிலைநிறுத்திக் கொள்ள முடியும்.

27. நாத்திக வாதங்கள், சிலரது அபிப்ராயங்கள் மட்டுமே. அவை ஒரு நாளும் மக்கள் சமூகத்தின் மதமாக இருந்ததில்லை.

28. மதங்கள் என்பவை நுணுக்கமான உயர்ச் செய்திகளை அறிய உதவும் பாதைகள் தாம். இருக்க வேண்டும்.

34. ஜாதி, மத வேறுபாடுகள் நீங்க வேண்டும். எந்நாட்டினரும் உயர்வு, தாழ்வின்றி ஒன்றுபட வேண்டும். அப்போதுதான் மனிதவர்க்கம் ஒரு சமுதாயமாக விளங்கும்.

வாழ்வின் அடிப்படையை மாற்றுவது" எதுவாக இருப்பினும் அதுதான் புரட்சி.

டாக்டர். இராதாகிருஷ்ணன்

கடந்த 40 ஆண்டுகளாக திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் சுமார் 20 இலட்சம் மக்கள் அபரிவிதமான யதேச்சதிகாரத்தின் கீழ் இருந்தது. அந்த சமயத்தில் நாராயணகுரு தன்னுடைய உயர்ந்த வாழ்கையாலும், தன்னலமற்ற சேவையாலும் மக்களின் நிலையை உயர்த்தி நிறுத்தினார். எனவே "கடமை தவறாத துறவி" என்று அவரை அழைப்பதில் தவறேதுமில்லை.

- ரொமேன் ரோலண்ட்.

உலகத்தைச் காப்பற்றுபவனும் விருப்பத்தை அறிந்தவனும் ஸ்வக்ஞனும் நல்ல மாணவர்களின் உயர் குருவாகியவருமான நாராயணகுரு அவர்களைத் தரிசிப்பதற்காக அழகான தென்னை, மா, மரங்களிடையே அடைந்திருந்த புண்ணியாசிரமும், அத்வைதத்தைப் போதிப்பதுமான ஆசிரமத்திற்குச் சென்றிருந்தேன். ஆனால் அவரைக் காணும் மகா பாக்கியம் எனக்கு கிடைக்கவில்லை.

- ஸ்வாமி தபோவனம்.

எல்லா ஜீவராசிகளும் இறையருளை தரிசித்த குருதேவர்தான் இருபதாம் நூற்றாண்டின் "அத்வைதாசாரியன்" என்று கூற வேண்டும். பாரதத்தின் ரிஷி பரம்பரையிலே சிறந்தவரான அவரது பாதையில் மனத்தாலும், வாக்கினாலும், உடலினாலும் நாம் அனைவரும் அவரைப் பின் தொடர்ந்து செல்ல வேண்டும்.

- ஜாகிர் உசேன்.

ஸ்ரீ நாராயண குருவின் தனிப் பெருமை

ஒரு யோகி ஆகுதல், ஆன்மீக வலிமை பெறுதல், தன்னிடம் வருபவர்களை தன்வயப்படுத்தும் திறமை, எளிமை, தூய்மை, தியாக மனப்பான்மை இவையாவும் தன்னடக்கி, விரிவான ஆக்க பணிகளுக்கு தலைமை தாங்குதல், உலகம் முழுவதும் தழுவக் கூடிய வகையில் பண்பாட்டு இயக்கம் ஒன்றை துவக்கி வைத்தல், அத்தனை காரியங்களும் ஒருவரால் முடியுமெனில் அந்த ஒருவர் நிச்சயமாக தெய்வீக வலிமையை பெற்றவராகத்தான் இருக்க வேண்டும்.

இவ்வையகத்தில் ஸ்ரீ நாராயண குருவுடன் ஒப்பிடக்கூடிய வேறு ஒருவரை சமீப கால வரலாற்றில் நம்மால் காண முடியாது.

- சுவாமி தர்மதீர்த்தர்